பிரைம்கிராமின்

# மெஹெவர

இருள் நீக்கும் உன்னத பணி

3 ஆம் தொகுதி - ஒன்பதாவது இதழ் - 2015 மே



தயாரிப்பு : திருமதி சமந்தா குமாரி

பிரைம் கிராமின் களுத்துறை கிளை அங்கத்தவர்

படப்பிடிப்பு: சுரங்க குறுப்புஆராச்சி

HNB "Prime Grameen is a subsidiary of Hatton National Bank PLC"

வாழ்க்கையின் அர்த்தம்

# வாழ்க்கையில் வெற்றிபெற உறுதுணை புரியும் ஐந்து திட்டங்கள். . . .

நாட்டில் அல்லது நிறுவனத்தில் சட்டக்கட்டமைப்பின் ஊடாக மனிதன் நிர்வகிக்கப்படுகிறான். அவை சமூகமயப்படுத்தப்பட்டு முறைமையின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும் போது அதன் பெறுபேற்றை பெற்றுக் கொள்ள முடியும். அவை அனைத்தும் சமூகத்தின், நிறுவனத்தின் முன்னேற்றம் மற்றும் அபிவிருத்திக்காக கொண்டுவரப்பட்டவையாகும். சமய ஒருமைப்பாடானது கலாசார பங்களிப்புடன் மனிதனின் வாழ்க்கை சிறப்பாக நிர்வகிக்கப்படுகிறது. எனினும், இவற்றுடன் தொடர்புடைய சகல காரணிகளும் இன்னொருவரால் வேறொருவருக்கு வழங்கப்பட்டு நிர்வகிக்கப்படுவதால் சட்டத்தில் குழப்பங்கள் ஏற்படலாம். என்றாலும் எமது வாழ்க்கைக்காக சுய சிந்தனையுடன் செயற்பட வேண்டும். தனது வளர்ச்சிக்காக படைப்பாற்றலுடைய சட்டரீதியான சமுதாயக் கட்டமைப்பை ஆரம்பித்துக் கொள்ள வேண்டும். அதுவே மனித வாழ்க்கையின் முதலாவது வெற்றியாகும். இதனால் தான் அனைத்து சமூகங்களுக்கும் சென்றடையும் வகையில், சம்பிரதாயபூர்வமான விடயங்களுக்கு அப்பால் சென்று சிந்திக்கும் வகையில் இந்தக் குறிப்பு எழுதப்பட்டுள்ளது.

ஒரு விடயத்தை சிறப்பாக செய்ய வேண்டுமென்றே நாம் ஆரம்பிக்கின்றோம். அதுவே சிறந்த மனிதனின் அடையாளமாகும். எனினும் இவற்றில் ஒரு சில நபர்கள் அல்லது பலர் வெற்றி பெற்றாலும் வெற்றி நடுநிலையாக இருக்க முடியாது. அதாவது வெற்றி தோல்வி என்பது நிகழத்தக்கவையாகும்.

எமது வாழ்க்கையில் இரண்டு பகுதிகள் உள்ளன. அவை தொழில்வாழ்க்கை மற்றும் குடும்ப வாழ்க்கை என பிரித்து பார்க்கலாம். இவ்விதம் நபர் ஒருவரின் தொழில் வாழ்க்கையின் ஊடாக அவனது வெற்றி தங்கியிருப்பதில்லை. அவ்வாறே குடும்ப வாழ்க்கை மாத்திரம் அவன வெற்றிக்கு பிரதானமானதென்று கூற முடியாது. இதனால் தான் நாம் இந்த இரண்டு விடயங்களையும் சரிசமாக கொண்டு செல்ல வேண்டும்.

இது ரயில் பாதையைப் போன்றது. ரயில் சரியான இலக்கை நோக்கி செல்வதற்கு ரயில்பாதை சரியாக அமைக்கப்பட்டிருக்க வேண்டும். அவ்வாறே அதனுடன் தொடர்புடைய சமிக்ஞைகளும் சரியாக பொருத்தப்பட்டிருக்க வேண்டும். அவ்வாறில்லையானால் குறித்த நேரத்திற்குள் இலக்கை அடைவதில் சிக்கல் ஏற்படலாம்.

இதனால் தான் நாம் எமது தொழில் வாழ்க்கையும், குடும்ப வாழ்க்கையும் சரிசமமாக கொண்டு செல்வதன் மூலம் எமது நோக்கத்தை இலகுவாக அடைய முடியும். தொழில் எனும் போது சுயதொழில் அல்லது வியாபாரம் செய்பவர்களின் நோக்கம் பலவாறாக இருந்தாலும் இலக்கு மாத்திரம் ஒன்றாகவே இருக்கும். ஒரு நபரின் பொறுப்பு மற்றும் அர்ப்பணிப்பின் ஊடாக மகிழ்ச்சிமிக்க வாழ்க்கையின் பெறுமதியை பெற்றுக் கொள்ள வேண்டுமானால் 5 விடயங்கள் தொடர்பில் எமது கவனத்தை திசைதிருப்ப வேண்டும். ஐந்து பாவங்களை தவிர்க்குமாறு புத்தபெருமானின் ஐம்பெரும் காப்பியத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. வாழ்க்கையின் வெற்றிக்கு இந்த ஐந்து விடயங்களும் நிச்சயமாக கைகொடுக்கும் என எதிர்பார்க்கிறோம்.

1. தொழில்
2. குடும்பம்
3. சமூகம்
4. ஆளுமை
5. சமயம்

### • தொழில்

வாழ்க்கையின் சகல செயற்பாடு களும் குடும்ப அலுவல்கள் அனைத்தினதும் வெற்றி தோல்விகள் இதில் அடங்கியுள்ளது. அவ்வாறே, மன நிறைவு, ஆர்வமின்மை என்பனவும் இதில் காணப்படுகின்றமை நாம் அறிந்த உண்மையாகும். இதனால், நாம் எப்போதும் தொழில் வெற்றிக்காக அர்ப்பணிப்பு மற்றும் உண்மையாக செயற்பட வேண்டும். ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு வருடமும் எமது தொழிலை மேம்படையச் செய்ய வேண்டியுள்ளது. அவ்வாறே தொழிலின் வெற்றி, தோல்விகள் வாழ்க்கையின் வெற்றி, தோல்வியில் நேரடியான தாக்கத்தை ஏற்படுத்துகிறது. தொழில் நூற்றுக்கு நூறு வீதம் வெற்றியளிக்கும் போது குடும்ப வாழ்க்கையும் வெற்றி பெறும். இதனால் தொழில் விடயத்தில் நாம் விசேட கவனம் செலுத்த வேண்டும்.

### • குடும்பம்

பத்து மாதம் வயிற்றில் சுமந்து பெற்றெடுத்த அன்பான தாய் மற்றும் குடும்பத்தலைவர் அன்பிற்குரிய தந்தை, உறவினர்கள், சகோதரிகள் ஆகியோரையும் நாம் மறந்து விட முடியாது. நாம் வாழ்க்கையில் எந்தளவு உயர்நிலையில் இருந்தாலும் அவர்களை புறக்கணித்தால் வாழ்க்கையின் முழுமையான வெற்றி கிடைப்பதில்லை. அவர்களை பராமரித்து, அந்நியொன்யமாக பழகுவது வெற்றி பெற்ற மனிதனின் குணாம்சங்களாகும். அவ்வாறே தனது அன்பிற்குரிய வாழ்க்கைத் துணை, பிள்ளைகள், பிள்ளைகளின் கல்வி, எதிர்காலம் ஆகியவற்றை பாதுகாப்பதும் சிறப்பான குடும்பமொன்றின் நாளாந்த செயற்பாடுகளாகும். அவ்வாறில்லையானால் அவர் எந்த நிலையில் வாழ்ந்தாலும் அவர் வெற்றிபெற்றவராக கருத முடியாது. வாழ்க்கையின் வெற்றி (Life Value ) குறைபாடாகவே பார்க்கப்படும். அதனால், தமது குடும்பம் தொடர்பில் உன்னிப்பாக செயற்பட வேண்டுமென்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

### • சமூகம்

நாம் எமது சுற்றுப்புறத்தில் வாழும் சமூகங்களின் நலனுக்காக ஏதேனும் பணிகளை செய்வதற்கு கடமைப்பட்டுள்ளோம். பிறந்து, வளர்ந்து, மரணிக்கும் காலம் வரை எமது சுற்றத்தாருக்கு எவ்வித சேவையும் செய்யாமல் மரணிப்பது நீர்த்துளியில் வெளிவந்த துளியைப் போன்றதற்கு சமமாகும். மனிதான பிறந்த ஒவ்வொருவரும் சமூகத்துக்கு ஏதேனும் நற்பணிகளை செய்ய வேண்டும். அதற்காக சமூக நலன்புரி சேவையில் ஓரளவாவது ஈடுபட்டு மற்றவர்களுக்காக காலம், நேரம், பணம் மற்றும் அறிவை வழங்க வேண்டும். இதுவே மனிதனின் உன்னத குணமாகும். அவ்வாறே வாழ்க்கையில் பெறுமதியையும் அறிந்து கொள்ள முடியும். எமது சமூகத்துக்காக நாம் தொடர்ச்சியாக பொறுப்பு மற்றும் உணர்வுடன் செயற்பட வேண்டும். அதுவே வெற்றிபெற்ற மனித வாழ்க்கையின் குணாம்சமாகும்.

### • ஆளுமை

எந்தவொரு விடயத்தையும் செய்வதற்கு முன்னர் தமது வாழ்க்கையை திறம்பட வைத்துக் கொள்ள வேண்டும். அதன் மூலமே சகல செயற்பாடுகளின் வெற்றி தங்கியுள்ளது. ஆரோக்கியம், சக்திமிக்க ஒழுக்க நெறியுடைய பண்பும் காணப்பட வேண்டும். அவ்வாறே அறிவும் காணப்பட வேண்டும். தனிப்பட்ட வாழ்க்கை வெற்றிபெறுவதற்கு தமக்கு இருக்க வேண்டிய சில பண்புகள் காணப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக தமது எதிர்கால பாதுகாப்புக்காக பணத்தை சேமிப்பதற்கு பழகிக் கொள்ள வேண்டும். அவ்வாறே, எதிர்காலம் தொடர்பில் மிகவும் தெளிவான திட்டமிட்டுக் கொள்ள வேண்டும். எமது வாழ்க்கைப் பயணம் நிரந்தரமற்றிருந்தாலும் நாளை தினத்தை திட்டமிடுவது நற்பழக்கங்களில் ஒன்றாகும். அவ்வாறு செயற்படும் போது தனிப்பட்ட வாழ்க்கை வெற்றிபெறுவதுடன் அதற்கான சகல செயற்பாடுகளையும் முன்கூட்டியே ஒழுங்கமைக்க வேண்டியுள்ளது.

### • சமயம்

மனித புனிதத்துக்காக ஆலயங்கள் ஆரம்பிக்கப்படுவது மனதை ஒருநிலைப்படுத்தி வாழ்க்கையின் அர்த்தத்ததை புரிந்து கொள்வதற்காகும். ஒவ்வொரு சமயமும் இதனையே குறிப்பிடுகின்றன. சமய செயற்பாடுகளில் முழுமையாக தன்னை அர்ப்பணிப்பதன் மூலம் மனிதன் முழுமையடைகிறான். எந்த சமயத்தைப் பின்பற்றினாலும் ஒழுக்கமிக்க மனிதனாக வாழ்வதற்கு ஆன்மீக நம்பிக்கையுடைய சமூகமொன்றை கட்டியெழுப்புவதற்கு சமயங்கள் மிகவும் இன்றியமையாத ஒன்றாகும்.

மேற்படி 5 விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தி மனித வாழ்க்கையை நடுநிலையாக கொண்டு சென்று வெற்றி பெறுவதற்கு நாம் அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும். நாமே நமக்கென்று ஒரு வழிமுறையை ஏற்படுத்திக் கொண்டு அல்லது விதியென்று நினைத்து அது தொடர்பில் கவனமெடுத்து செயற்பட பழகிக் கொள்ள வேண்டும். அதனால் தான் எமது வாழக்கைப் பயணத்தின் எதிர்கால செயற்பாடுகள் சிறப்பான அமையும். அவ்விதம் செயற்படும் போது தான் நாம் மரணிக்கும் போது திறன்மிக்க மனிதராக வாழ்க்கையில் அடையாளம் காணப்படுவோம். வாராந்தம், மாதாந்தம், வருடாந்தம் போன்ற காலப்பகுதிகளில் எவ்வளவுதான் மேற்படி 5 விடயங்கள் குறித்து நாம் எந்தளவு கவனம் செலுத்தியுள்ளோம் என்பதை அறிந்து கொள்ள முடியும். அவ்வாறே மிகவும் சந்தோசமான வாழ்க்கை கிடைத்ததையிட்டு திருப்தியடைய முடியும். மிகவும் திறன்மிக்க, திருப்திகரமான வாழ்க்கையை கட்டியெழுப்புவதற்கும் வெற்றிகரமான வாழ்க்கைக்கும் சக்தியும், நம்பிக்கையும் அனைவருக்கும் கிடைக்க பிரார்த்தனை செய்வோம்.



**அனுர உடவத்த**
பிரிவுத் தலைவர்,
பயிற்சி

**மற்றவர்களை விமர்சிப்பதிலும் அவர்களின் குறைகளைத் தேடுவதிலும் தவிர்ந்து கொள்ளுங்கள்**



# கிராமின் சக்தி

## அவரின் வளர்ச்சி

# நாற்று மேடை ஆரம்பிக்க அக்காலப்பகுதியில் எமது வாழ்க்கையை நடத்துவதிலும் சிக்கல் தோன்றியது

**கே.ரி. சமந்தாகுமாரி**
**அங்கத்தவர், பிரைம் கிராமின் களுத்துறை கிளை**

சனச்செறிவு கொண்ட காலி வீதியின் மக்கொன நகரத்தை அண்மித்தவுடன் சகலரினதும் பார்வையை தூண்டக்கூடிய பூஞ்செடிக் கடைகளை அவதானிக்க முடியும். பல்வகையான மலர்கள் மற்றும் பலவகையான மலர் கன்றுகளைக் கொண்டுள்ள இந்த இடத்தில் முன்னணி விற்பனை நிலையமாக "நிபுணி நாற்றுமேடை நிலையம்" என்ற பெயர் கொண்ட கடையை அடையாளப்படுத்த முடியும்.

மிகவும் அழகான மலர்கள் பூத்துக் குலுங்கும் முட்களைக் கொண்ட இளஞ்சிவப்பு ரோஸ் பூக்களாகும். மழை ஓய்ந்து வெயில் வரும் வேளையில் தோன்றும் சூரியனைப் போன்ற இளஞ்சிவப்பு நிறத்தைக் கொண்ட ரோஸாப்பூக்கள் உள்ளத்தைக் கவரும் வகையில் அடுக்கடுக்காக அந்த கடையில் வரிசைப்படுத்தப்பட்டிருந்தன. உலகை வெற்றி கொண்ட பலர் கரடுமுரணான பாதையை கடந்து வந்த வரலாறு காணப்படும். அந்த கொள்கை சகலருக்கும் பொருந்தா ஒன்றாக காணப்பட்டாலும் "நிபுணி நாற்றுமேடை நிலைய உரிமையாளர் கே.ரி. சமந்தா குமாரிக்கு என்றால் பொருத்தமாகும். அவர் எங்களுக்கு தெரிவித்த வெற்றியின் கதையை கீழே தருகிறோம்.

எனது பிறந்த இடம் பேருவளை. எனது தகப்பன் தச்சுத் தொழில் செய்து வந்தார். அம்மா என்னையும் எனது மூன்று சகோதரர்கள் பராமரித்து வந்தார். தினமும் வருமானத்தை எதிர்பார்க்காத தச்சுத் தொழில் எங்கள் ஐவரையும் பராமரிப்பதற்கு தந்தை பல்வேறு போராட்டங்களை செய்து வந்தார். இதனால், எனது படிப்பை தொடர முடியாமல் இடையில் நிறுத்த வேண்டியேற்பட்டது.

எமது வீடு களிமண்ணால் செய்யப்பட்ட சிங்கள பாரம்பரிய கதவு இல்லாத சிறிய வீடாகும். அந்த வீடு உடைந்து கீழே விழும் நிலையில் காணப்பட்டதுடன் எமது வறுமை எம்மை ஆட்டிப்படைத்துக் கொண்டிருந்த வரலாற்றை இன்றும் நினைக்கின்றேன். அவ்வாறான சூழ்நிலையில் நான் 19 வயதில் திருமணம் முடித்தேன். எனது கணவர் ஹோட்டல் ஒன்றில் "லேண்ட்ஸ் கேப்பின்" தொழில் செய்து வந்தார். மணம் முடித்த கணவருடன் நான் சென்றுவிட்டேன். எனது கணவருக்கு பூஞ்செடிகள் விற்பனை செய்ய வேண்டுமென்ற எண்ணம் மனதில் இருந்தது. அப்போது எனது கணவருக்கு மாதாந்தம் 3000ரூபா சம்பளம் கிடைத்தது. பூஞ்செடி விற்பனை நிலையத்தினால் எமது வாழ்க்கையில் பிரச்சினைகள் ஆரம்பித்தன. அதே காலப்பகுதியில் 36,000 ரூபா சீட்டு ஒன்றும் போட்டிருந்தேன். இந்தப் பணத்தைப் பெற்று பூஞ்செடி விற்பனை நிலைய ஒரு வருட வாடகைப் பணத்தை செலுத்தினேன். இது 2007ஆம் ஆண்டு. எனினும் மேலதிக வேலை செய்வதற்கு பணம் போதுமானதாக இருக்கவில்லை. அப்போதுதான் பிரைம் கிராமின் நிறுவனம் தொடர்பில் அறிந்து கொள்ள முடிந்தது. என்றாலும் எனக்கு கடன் எடுப்பதற்கு அச்சமாக இருந்தது. ஏனெனில் வங்கியில் கடன் எடுக்கும் போது பல்வேறு சிரமங்களை எதிர்கொள்ள வேண்டுமென்று எனக்கு தெரியும். என்றாலும் பிரைம் கிராமின் ஊடாக இலகுவாக கடனைப் பெற்றுக் கொள்ள முடியுமென்பதை எனது நண்பியின் ஊடாக தெரிந்து கொண்டேன். அதன் பின்னர் நான் பிரைம் கிராமின் நிறுவனத்தில் அங்கத்தவராக இணைந்து கொண்டேன். முதன் முதலில் 5000ரூபா கடனைப் பெற்றுக் கொண்டேன். அந்தப் பணத்தைக் கொண்டு போகன் விலா கன்றுகள் உட்பட சில மரக்கன்றுகளையும் வாங்கி சிறிதான எனது வியாபாரத்தை ஆரம்பித்தேன். இதனுடன் நாங்கள் கொந்தராத்து அடிப்படையில் பூங்கா அலங்காரம் செய்வதையும் செய்து வந்தோம். இரவு பகல் பாராது எமது முயற்சியை தொடர்ந்தோம். பூஞ்செடி விற்பனையை படிப்படியாக அதிகரித்தோம். இதற்கு பிரைம் கிராமின் நிறுவனம் பக்கபலமாக இருந்து எமது தொழில் முயற்சி விருத்திக்கு உதவியது. நாம் தொடர்ச்சியாக எமக்கு தேவையான போது கடனைப் பெற்றுக் கொண்டோம். அவ்வாறே பெற்ற கடனை மிகுதியின்றி தொடர்ச்சியாக செலுத்தி வந்தோம். தற்போது எங்களிடம் 06 பேர் ஊழியர்களாக இருக்கின்றனர். இவை அனைத்தும் எமது பாரிய தியாகத்தின் வெற்றிப் படியாகும். உத்யான அலங்கரிப்புக்கு மேலதிகமாக ஹோட்டல் போன்ற வியாபார நிலையங்கள் பலவற்றிலும் நாம் அலங்கரிப்புக்காக வாடகைக்கு எடுக்கப்பட்ட அலங்கார பூக்களைப் பெற்று அந்தத் தொழிலையும் முன்னெடுத்துச் செல்கிறோம். தற்போது ஒரு இலட்சம் ரூபா கடனைப் பெறும் நிலையில் இருக்கிறோம்.

சகலருடைய வாழ்க்கை என்றும் ஒரே வடிவில் அமைவதில்லை. மலையொன்று ஏறினால் பள்ளமொன்று இருக்கும் என்பதை நாம் அறிவோம். அவ்வாறே, வாழ்க்கையில் கஷ்டங்களுக்கு மத்தியில் வாழும் போது அதனை முன்மாதிரியாகக் கொண்டு வெற்றி பெறுவதற்காக முயற்சி செய்ய வேண்டும். சமந்தாவின் வெற்றிக்கு பிரைம் கிராமின் நிறுவனம் வழங்கிய பங்களிப்புக்கு இதயபூர்வமான நன்றிகளை ஆனந்தக்கண்ணீருடன் தெரிவித்தார். அவரின் வளர்ச்சிப் பயணத்தில் பிரைம் கிராமின் நிறுவனமும் பங்காளராக இருந்தமையையிட்டு மகிழ்ச்சியை தெரிவிப்பதுடன் அவரின் வளமான எதிர்காலத்துக்காகவும் பிரார்த்தனை செய்கிறோம்.



ஆக்கம்
மஞ்சுள பிரபாத் ஹெட்டியாராச்சி
படம் - லக்ஷ்மன் குமாரதுங்க



# பெற்றுக் கொண்ட நன்மதிப்பை எதிர்கால முன்னேற்றத்துக்கு பயன்படுத்துவதே எமது நோக்கமாகும்...

- பிரைம் கிராமின் களுத்துறை கிளை

## பிரைம் கிராமின் கிளையின் செயற்பாடுகள்




நீண்டு உயர்ந்து காணப்படும் மரங்களையும், நீலக் கடற்கரையையும் தன்னகத்தே கொண்டமைந்த களுத்துறை நகரம் வியாபார செயற்பாடுகளுக்கு மாத்திரமின்றி கைத்தொழில் துறைக்கு பிரசித்த பெற்ற இடமென்றால் அது மிகையாகாது. பல்லாண்டுகளுக்கு பின்னர் புதிய கட்டிடத்தில் மக்களுக்கு சேவை செய்வதற்காக நகர மத்திக்கு இடமாற்றம் பெற்றுள்ள பிரைம் கிராமின் நிறுவனம் தொடர்பான செயற்பாடுகளை அலசி ஆராய்வதற்காக நாம் களுத்துறை கிளைக்கு சென்றோம். சூடான தேனீரைப் பருகிய பின்னர் களுத்துறை கிளையின் செயற்பாடுகள் தொடர்பில் எம்முடன் கலந்துரையாடலை செய்த அதன் முகாமையாளர் நளீன் குணவர்தன அவர்கள் தெரிவித்த கருத்துக்களை கீழே தரலாம் என்று நினைக்கிறேன்.

பிரைம் கிராமின் கிளைகளில் 18ஆவது இடத்தில் இருக்கும் களுத்துறை கிளை பிரைம் கிராமின் கிளைகளுடன் 2003 நவம்பர் மாதம் இணைந்து கொண்டது. களுத்துறை என்பது இலங்கையின் ஏனைய பிரதேசங்களைவிட பல்வகையான வர்த்தக செயற்பாடுகளைக் கொண்டமைந்த நகரமாக அனைவராலும் கூறப்படுவதுண்டு. களுத்துறை வடக்கு, பயாகல பிரதேசத்தில் 2003ஆம் ஆண்டில் பிரைம் கிராமின் கிளை ஆரம்பிக்கப் பட்டது. எமது செயற்பாடுகளை துரிதப்படுத்தும் வகையிலும், வாடிக்கையாளரின் தேவைகளை மேலும் சிறப்பாக முன்னெடுப்பதற்காக கடந்த 2015 ஜனவரி மாதம் 29ஆம் திகதி முதல் இல. 427, காலி வீதி களுத்துறை வடக்கு என்ற முகவரியில் செயற்பட்டு வருகிறோம்.

எமது மத்திய நிலையங்களில் அந்தந்த இடங்களில் பிரசித்தி பெற்ற வர்த்தக செயற்பாடுகள் தொடர்பில் கருத்து தெரிவிக்கையில், களுத்துறை நகரத்துக்கு வெளியில் கிராமங்களில் அதிகளவில் காணக்கூடியதாக இருப்பது விசேடமாக தேயிலை, இறப்பர், மரக்கறி, அதனுடன் தொடர்புடைய ஏனைய தொழில்களைக் காணலாம். அவ்வாறே, பேருவளை மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் கடற்கரையை அண்டிய பிரதேசங்களில் கடற்தொழில், கருவாட்டுத் தொழிலில் அதிகளவானவர்கள் ஈடுபட்டுள்ளதைக் காணலாம். களுத்துறை, பொத்துபிட்டிய பகுதியில் அதிகளவானவர்கள் தும்புக் கைத்தொழில், தும்புத்தடி உற்பத்தியில் ஈடுபடுவதைக் காணலாம். அதற்கு மேலதிகமாக எந்தவொரு பிரதேசத்திலும் சாதாரண கைத்தொழில் நிலையங்களைக் காணலாம். எமது அங்கத்தவர்கள் இவற்றில் பல கைத்தொழில்களில் ஈடுபட்டு வருகிறார்கள். அவர்கள் அந்த கைத்தொழிலை செய்து கொண்டிருக்கும் அதேவேளையில் மேலதிகமாக ஏதேனும் கைத்தொழிலில் ஈடுபடுவதற்கான கடன் உதவிகள் மற்றும் ஆலோசனைகளை நாம் தொடர்ந்து வழங்கி வருகின்றோம். இன்று வரை எமது மத்திய நிலையங்கள் 129இல் 4250 அங்கத்தவர்களுக்கு கடன் வசதிகளை பெற்றுக் கொடுத்துள்ளோம். அவர்களின் கைத்தொழிலுக்காக 414 மில்லியன் ரூபாவை கடன் தொகையாக வழங்கியுள்ளோம்.


பிரைம் கிராமின் நிறுவன களுத்துறை கிளை அங்கத்தவர்கள்

களுத்துறை கிளையின் செயற்பாடுகளை விஸ்தரிக்கும் வகையில் மத்திய நிலையங்கள் பரந்தளவில் காணப்படுகின்றன.

களுத்துறையில் இருந்து பாணந்துறை, ஹொரனை வீதியில் பட்டகொட, மில்லனிய வரையும், அளுத்கமையில் இருந்து தர்காநகர் வரையும் மத்துகம வீதியின் தெம்புவன வரையும், எமது 129 மத்திய நிலையங்கள் சகல இடங்களிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த மத்திய நிலையங்களின் ஊடாக சிறு கைத்தொழிலுக்கு அங்கத்தவர்களாக இணைந்து கொள்ளும் அங்கத்த வர்களுக்கு கடன் வசதி வழங்கப் படுகின்றன.

பிரைம் கிராமின் மைக்ரோ பினான்ஸ் லிமிட்டெட்டினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள "யாலு" சிறுவர் சேமிப்பு கணக்கு, மியுலெஸி பெண்கள் சேமிப்பு கணக்கு மற்றும் பிரைம் சேமிப்பு கணக்கு ஆகிய சேமிப்பு கணக்குகளும் அபிலாஷ, சுவசக்தி, பிரைம் லோன், ஈசி லோன் ஆகிய கடன் திட்டங்களும் எமது கிளையில் நடைமுறையில் உள்ளன. அங்கத்தவர்களுக்கு நாளாந்தம் வழங்கப்படும் உடனடி கடன் "நிவாரணக் கடன்" கடன் திட்டத்தின் கீழ் எமது அங்கத்தவர்களின் பிள்ளைகளின் கல்விக்கு தேவையான நாளாந்த செலவுகளுக்கு துணையாக இருக்கின்றோம். இந்த நிவாரணக் கடன் திட்டத்தின் கீழ் கடந்த காலத்தில் மாத்திரம் 65 மில்லியன் ரூபா அங்கத்தவர் பிள்ளைகளின் கல்வி செயற்பாட்டுக்காக வழங்கப்பட்டுள்ளது. அங்கத்தவர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உதவிக்காக ஆரம்பிக்கப்பட்ட அங்கத்தவர் மற்றும் கடன் பாதுகாப்பு நிதியத்தின் கீழ் மரண சகாய நிதி மற்றும் நஷ்டஈடு ஆகியவற்றுக்காக 410000 ரூபா தொகையை கடந்த காலங்களில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

களுத்துறையை எடுத்துக் கொண்டால் நான் ஆரம்பத்தில் குறிப்பிட்டதைப் போன்று பல்வேறு கைத்தொழில்களுக்கு பிரசித்தி பெற்ற இடமாகும்.

கைத்தொழில் நிலையங்களுக்கு மேலதிகமாக நிதி செயற்பாடுகளை துரிதப்படுத்தும் வகையிலான நிதி நிறுவனங்களும் பாரிய அளவில் இப்பிரதேசத்தில் பரந்து காணப்படுகின்றன. எமக்கு அந்த நிறுவனங்களுடன் போட்டியின்மைக்கான காரணம் இலங்கையின் முன்னணி நுண்நிதி நிறுவனமாக எமது நிறுவனம் மக்களின் நம்பிக்கையை தொடர்ந்து தக்க வைத்து நுண்நிதி நிறுவனமாக நாம் பெற்றுக் கொண்ட நன்மதிப்பினாலாகும். 12 வருடங்களுக்கும் மேலாக செயற்பட்டு வரும் பிரைம் கிராமின் நற் பெயரை தொடர்ந்தும் பேணி, நிறுவனத்தை முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்வதே எமது நோக்கமாகும்.

| மத்திய நிலையங்கள் | அங்கத்தவர் எண்ணிக்கை | ஊழியர் எண்ணிக்கை | வழங்கப்பட்ட கடன் அளவு ரூபா |
|---|---|---|---|
| 129 | 4250 | 20 | ரூ.மி. 414 |

**பிரைம் கிராமின் களுத்துறை கிளை உத்தியோகத்தர்கள்**

லலித் வீரதுங்க
கிளை முகாமையாளர்
நளின் குணவர்தன
உதவி முகாமையாளர்
சந்துன் குணதிலக
நிதிப் பிரிவு தலைவர்
அரவிந்த சந்தருவன்
சிரேஷ்ட முகாமையாளர்
கயான் ரொட்ரிகோ
பிரசான் தனஞ்சய
சிரேஷ்ட நிறைவேற்று
நிரோத அகலங்க
திகாயு சத்ரசேன
ஹர்ஷ மகவத்த
ஷம்மிக பீரிஸ்
சூலக ஜயசிங்க
கசுன் கல்ஹார
சந்துன் சானக
லஹிரு ரணவீர
ஷெஹான் குரே
ஒசுரு சத்சர
சமீத தர்ஷன
சேமிப்பு நிறைவேற்று
ஹரிந்து மஞ்சு ஸ்ரீ
கணக்கு உதவியாளர்
லக்ஷிகா லக்மாலி
சேனக பிரியந்த
சம்பத் குமார

பிரைம் கிராமின்
மைக்ரோ பினான்ஸ் லிமிட்டெட்
இல. 427, களுத்துறை வீதி,
களுத்துறை வடக்கு
தொலைபேசி: 0342235293
மின்னஞ்சல்
kalutara@primegrameen.lk

ஆக்கம் -
மஞ்சுள பிரபாத் ஹெட்டியாராச்சி
படப்பிடிப்பு
சுரங்க குறுப்புஆராய்ச்சி


லலிந்த வீரதுங்க
பிரதேச முகாமையாளர்


நளின் குணவர்தன
கிளை முகாமையாளர்


சந்துன் குணதிலக
உதவி முகாமையாளர்


அரவிந்த சந்தருவன்
நிதிப் பிரிவு தலைவர்


பிரசான் தனஞ்சய
சிரேஷ்ட முகாமையாளர்


கயான் ரொட்ரிகோ
சிரேஷ்ட முகாமையாளர்

வெற்றியை மற்றொருவருடன் ஒப்பீடு செய்து அளவிட முடியாது

## பிரைம் கிராமினுடன் எமது பயணம் இலகுவானது

பிரைம் கிராமின் நிறுவனத்தின் ஆரம்பகால அங்கத்தவர் என்ற வகையில் ரேணுகா தமயந்தி தமது வியாபார கொடுக்கல் வாங்கல்களை பிரைம் கிராமின் நிறுவனத்தில் 2004ஆம் ஆண்டு ஆரம்பித்தார். முறுக்கு உற்பத்தியில் தமது சுய தொழிலை ஆரம்பித்த அவர், வர்த்தகர் என்ற வகையில் முறுக்கு உற்பத்தி தொடர்பில் பயிற்சி நெறிகளைகளையும் செய்து வருகின்றமை விசேட அம்சமாகும்.



இன்றுவரை கிளைகள் உருவாகுவதைப் போன்று நிதி நிறுவனங்கள் பல தோன்றினாலும் எமக்கு தெரிந்த காலம் முதல் எம் போன்ற சிறிய கைத்தொழிலாளர்களுக்கு உதவிகள் செய்வதில் முன்னணியில் இருந்தது பிரைம் கிராமின் நிறுவனமாகும். அன்றிலிருந்து இன்று வரையான சந்தையில் மாற்றங்கள் ஏற்பட்டாலும் பிரைம் கிராமின் நிறுவனம் தொடர்ந்து மக்கள் சேவையில் ஈடுபட்டு எமது கைத்தொழில் வளர்ச்சிக்கு பெரிதும் உறுதுணையாக இருக்கிறது. இன்று என்னிடம் ஐந்து பேர் தொழில் புரிகின்றனர். ஒரு நாளில் 350 முறுக்கு பெக்கட்டுகளை நாம் உற்பத்தி செய்கிறோம். எமது உற்பத்திக்கேற்ற சந்தை வாய்ப்பு காணப்படுகிறது.

நான் பிரைம் கிராமின் நிறுவனத்தில் பல தடவை கடன் பெற்றுள்ளேன். அந்தப் பணத்தை எனது கைத்தொழிலுக்கே முதலீடு செய்தேன். வாழ்க்கையின் வெற்றிக்கு தேவையான உணர்வு மற்றும் அர்ப்பணிப்பு உள்ளவர்களுக்கு தேவையான வழிகாட்டி இன்றியமையாதது. அதற்கு தேவையான திட்டமிடல் சரியாக இருக்கும் போதே வெற்றி பெற முடியும். பிரைம் கிராமின் நிறுவனம் தொடர்ந்து எமக்கு வழங்கும் வழிகாட்டலினால் நாம் எளிதாக எமது நோக்கத்தை அடைந்து கொள்ளக்கூடியதாக இருக்கின்றது.

ரேணுகா தமயந்தி மொல்லிகொட வாத்துவ

## வர்த்தக நிறுவனமொன்றின் வெற்றிக்கு உதவி, ஒத்தாசைகள் செய்யும் நிறுவனங்களின் பங்களிப்பும் அவசியமாகும் . . .






பழச்சாறு உற்பத்தி செய்யும் தொழிலில் ஈடுபட்டுள்ள ஷலனி தீப்திகா, பிரைம் கிராமின் நிறுவனத்தில் 2011ஆம் ஆண்டு இணைந்து கொண்டார். பழச்சாறு உற்பத்திக்கு தேவையான மூலப்பொருட்களை கொள்வனவு செய்வதற்கு தேவையான பணத்தைப் பெற்றுக் கொள்ளும் நோக்கத்துடனே அவர் இணைந்து கொண்டார். ஷலனி அவரது கைத்தொழிலுக்கு பிரைம் கிராமின் வழங்கிய பங்களிப்பு தொடர்பில் எமக்கு இவ்வாறு தெரிவித்தார். “நாம் பால், பழம் ஆகியவற்றை உள்ளீடு செய்து இந்த பழச்சாற்றை உற்பத்தி செய்கிறோம். கைத்தொழிலை செய்வதற்கு தேவையான மூலப்பொருட்களை கொள்வனவு செய்யும் நோக்கத்துடன் நான் பிரைம் கிராமின் நிறுவனத்தில் முதன் முதலில் 35,000ரூபாவை கடனாக பெற்றுக் கொண்டேன். பால் பெக்கட் உற்பத்திக்காக என்னிடம் நான்கு பேர் தொழில் புரிகின்றனர். நாங்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை எனது சகோதரரும், தந்தையாரும் கடைகளுக்கு கொண்டு செல்கின்றனர். எமது உற்பத்தி தொடர்பில் நல்ல கேள்வி உள்ளது. எனினும் அந்தக் கேள்வியை பூர்த்தி செய்வதற்கு தேவையான நேரம் இல்லை. பிரைம் கிராமின் நிறுவனத்தில் அண்மையில் 150,000 ரூபா பணத்தை கடனாக பெற்றேன். குளிர்சாதனப் பெட்டியொன்றை கொள்வனவு செய்வதற்காகவே இந்தப் பணம் பெறப்பட்டது. கைத்தொழில் ஒன்று வெற்றி பெறுவதற்கு உதவி ஒத்தாசைகள் செய்யும் நிறுவனங்கள் விசேடமாக தேவைப்படுகின்றன. அந்த வகையில் எமது வெற்றிக்கு பின்னால் பிரைம் கிராமின் நிறுவனம் பாரிய சக்தியாக விளங்குகிறது.

பி. ஷலனி தீப்திகா
ராகலவெல, ஹல்கந்தவில
பயாகல

## இலகுவாக கடனைப் பெற்றுக் கொள்ளும் நிறுவனமாக பிரைம் கிராமின் நிறுவனம் தொடர்பில் எமக்கு அதீத நம்பிக்கை உண்டு



தும்பு கயிறு, நைலோன் கயிறு ஆகிய கயிறு வகைகள் வாழ்க்கையில் அந்தளவு போதுமான வருமானத்தை ஈட்டித் தராவிட்டாலும் நூல் கயிறு என்ற பதம் எமது உள்ளத்தில் இருந்து என்றும் அகற்ற முடியாத ஒன்றாகும். பலமான முன்னேற்றத்துக்காகவும் அழகுக்காகவும் வாங்கப்படும் நூல் கயிறு தயாரிக்கும் கைத்தொழிலாளரான ஹர்ஷனியை நாங்கள் வாத்துவ, பொத்துபிட்டிய பிரதேசத்தில் சந்தித்தோம்.

“நாம் இந்தக் கைத்தொழிலை ஆரம்பித்து சுமார் 9 வருடங்கள் ஆகின்றன. ஆடைக்கைத்தொழில் நிலையங்களில் மொத்தமாக நூல்களை வாங்கிதான் இந்த நூல் கயிறு தயாரிக்கப்படுகின்றது. இந்தத் தொழில் அந்தளவு பிரபல்யம் அடையாத தொழிலாக இருந்தாலும் நல்ல சந்தை வாய்ப்பு காணப்படுகிறது. இந்த தொழிலில் ஈடுபடும் போது நூல் வாங்குவதற்கு மாத்திரமே பணம் தேவைப்படுகிறது. நான் பிரைம் கிராமின் நிறுவனத்தில் சுய தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு இலகுவாக கடனைப் பெற்றுக் கொள்ள முடியுமென்பதாலும் இந்நிறுவனத்துக்கு வர்த்தகத்துறையில் நன்மதிப்பு இருப்பதால் தான் இணைந்து கொண்டேன். அவ்வாறே நான் பிரைம் கிராமின் நிறுவனத்தில் பல தடவை கடன் பெற்றுள்ளேன். அந்தப் பணத்தைக் கொண்டு எமது தொழிலை ஓரளவு உயர்த்தக் கூடியதாகவும் பலருக்கு தொழில் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கக்கூடியதாகவும் அமைந்தது. இன்று வர்த்தகத்துறையில் கடன் வழங்கும் பல நிறுவனங்கள் காணப்பட்டாலும் எவ்வித தேடல்களும் இன்றி தேவையான கடன் தொகையை தேவையான நேரத்தில் பெற்றுக் கொடுப்பதில் முன்னணியில் இருக்கும் நிறுவனமான பிரைம் கிராமின் தொடர்பில் எமக்கு அதீத நம்பிக்கையும் விசுவாசமும் உண்டு.

ஜே.எச்.ஹர்ஷனி, பொத்துபிட்டிய, வாத்துவ.

## அபிலாஷ கடன் திட்டம் எமக்கு மிக இலகுவானதும் நிவாரணக் கடன் வழங்கும் திட்டமாகும்

PrimeGrameen
அபிலாஷ
எதிர்காலத்தை அடிதளம்

சிறிய மற்றும் நடுத்தர வியாபாரிகளுக்காக பிரைம் கிராமின் மைக்ரோ பினான்ஸ் நிறுவனத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள கடன் திட்டங்கள் பலவற்றில் “அபிலாஷ” கடன் திட்டத்திற்கு நல்ல வரவேற்பு காணப்படுகிறது. மிகவும் இலகுவாக பெற்றுக் கொள்ளக்கூடிய கடன் திட்டமாக மக்களை இலகுவில் கவரக்கூடியதாக அபிலாஷ கடன் திட்டம் காணப்படுகிறது. இந்த கடன் திட்டத்தின் ஊடாக இலக்கை அடைந்து கொண்ட வியாபாரி ஒருவரை நாம் அண்மையில் சந்தித்தோம். அவரின் பெயர் ரீட்டா ரத்கமகே. தர்கா நகரில் அமைந்துள்ள சஜான் சலூன், கடந்த 30 வருடமாக மக்களின் நன்மதிப்பை பெற்ற வர்த்தக நிலையமாகும். அழகு நிலையம் உட்பட மணமகள் அலங்கரிப்பு தொடர்பான பாடங்களையும் இலவசமாக நடத்தும் சஜான் சலூன் வர்த்தக நிலைய செயற்பாடுகள் மிகவும் பரந்த அடிப்படையில் நடத்தப்படுகின்றது. தேவை ஏற்படும் போது கடனைப் பெற்றுக்கொள்ளும் வசதி காணப்படுவதாக சஜான் சலூன் உரிமையாளர் ரீட்டா ரத்கமகே எங்களுக்கு தெரிவித்தார்.






சலூனை மேலும் விஸ்தரிப்பதற்காக எமக்கு கடன் பெற்றுக் கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டது. சிறிய மற்றும் நடுத்தர அளவு கடன் வழங்கும் நிதி நிறுவனம் எங்கு காணப்பட்டாலும் அவை அனைத்துக்கும் மேலாக பிரைம் கிராமின் அபிலாஷ கடன் திட்டமானது எமக்கு மிகவும் இலகுவானதும் நிவாரணக் கடன் வழங்கும் திட்டமென்றே நான் நினைக்கிறேன். அதனால், பல்வேறு வங்கிகளுக்கு சென்று அலைந்து திரிவதை விட அபிலாஷ கடன் திட்டத்தின் மூலம் முதலில் நான் மூன்று இலட்சம் கடன் பெற்றேன். எதிர்காலத்திலும் பிரைம் கிராமின் அபிலாஷ கடனைப் பெற்று எமது வர்த்தக நிலையத்தை முன்னேற்றுவதே எமது எதிர்பார்ப்பாகும்.

சஜான் சலூன், மத்துகம வீதி, தர்காநகர்.


**தோல்வி என்ற ஒன்றில்லை என்பது வெற்றியின் பின் அறிந்து கொள்ளலாம்**







# உங்களுக்கு தெரியாத நான்



## பிரியந்த திஸாநாயக்க
## பிரதேச முகாமையாளர், அம்பாறை பிரதேசம்

**முழுப்பெயர் :** திஸாநாயக்க முதியன்சலாகே பிரியந்த பிரேமலால்

**பிறந்த திகதி :** (விருப்பம் என்றால்) 1978.08.24

**பாடசாலையில் கல்வி கற்ற போது விருப்பமான பாடசாலை**

நான் இரண்டு பாடசாலைகளில் கல்வி கற்றேன். அம்பாறை பரககெலே மகா வித்தியாலயத்தில் தரம் 8 வரை கற்றேன். பின்னர் அம் / காமினி மகா வித்தியாலயத்தில் உயர்தரம் வரை கல்வி கற்றேன். இந்தப் பாடசாலை கலவன் பாடசாலையாகும். இவ்விரு பாடசாலைகளிலும் எனக்கு உயர்தரம் படித்த காலமே மிகவும் பிடித்த காலமாகும். அதுவும் எமது பாடசாலை வாழ்க்கை இறுதிக் கட்டத்தை அடைந்த போது அதிலிருந்து பிரிந்து செல்லப் போகிறோம் என்ற உணர்வுடன் ஏற்பட்ட அதிர்ச்சி மற்றும் தொடர்ந்தும் பாடசாலையில் இருக்க வேண்டுமென்ற உணர்வும் ஏற்பட்டது. அதனுடன் இன்னுமொரு விடயமும் இருந்தது. அதுதான் எனது பாடசாலைக் காதல். இவை அனைத்தும் தான் நான் காமினி பாடசாலையை விரும்பியதற்கு காரணமாகும்.

**துறை:** வியாபார புள்ளிவிபரத் துறை: 97ஆம் ஆண்டு தான் வியாபார புள்ளிவிபரத் துறை அறிமுகப்படுத்தப்பட்டது. இதனால் நான் மிகவும் ஆர்வத்துடன் இந்தத் துறையை தேர்ந்தெடுத்தேன்.

**விளையாட்டு:** எனது பாடசாலைக்காலத்தில் இருந்து விளையாட்டில் அந்தளவு ஆர்வம் காட்டவில்லை.

**பாடசாலைக்காலத்தில் மறக்க முடியாத சம்பவம்:** படிப்பிக்க வருகை தந்த ஆசிரியை நிறைமாத கர்ப்பிணியாக இருந்தார். இதனால் அவர் சற்று கஷ்டப்பட்டே எமக்கு பாடம் நடத்தினார் என்பது எனக்கு விளங்கியது. எனினும் ஆசிரியர் ஒரு நாளும் லீவு (விடுமுறை) எடுக்கவில்லை. தமது வலியைப் பொருட்படுத்தாது ஆசிரிய தொழிலின் மகோன்னதம் மற்றும் எமது எதிர்காலத்திற்காக அர்ப்பணித்தார். உயர்த்தரப் பரீட்சை நடைபெற உள்ள இறுதி காலப்பகுதியில் அவரின் தந்தையார் மரணமடைந்தார். அந்த சந்தர்ப்பத்தில் நாங்கள் அவரின் வீட்டுக்குச் சென்றோம். அப்போது ஆசிரியர் எங்களை ஏசி வீட்டில் இருந்து அனுப்பிவிட்டார். நீங்கள் பாடத்தில் கவனம் செலுத்தி நன்றாக பரீட்சையில் சித்தியடைய வேண்டுமெனக் கோரினார். ஆசிரியர் தொழிலின் பொறுப்பு மற்றும் அர்ப்பணிப்பு இதன் மூலம் வெளிப்பட்டதுடன் இது எனது வாழ்வில் மறக்க முடியாத சம்பவமாகும்.

## அந்த உணர்வு முதன் முதலில் ஏற்பட்டவுடன் மின்சாரம் தாக்கியதைப் போன்று காணப்பட்டது . . .

**பாடசாலைக் காலத்தில் பெரியவராக வந்தவுடன் எதிர்பார்த்திருந்திருந்தது:** நான் இவ்வாறான பதவியொன்றை பெறுவேன் என்று என்றும் எதிர்பார்க்கவில்லை. எனினும் தனியார் துறையில் தொழில் ஒன்றை செய்ய வேண்டுமென்ற ஆர்வம் இருந்தது.

முதல் தொழிலை பெற்றுக் கொள்வதில் இருந்த சிரமம்: எனது தாய், தந்தையர் இருவரும் கமத்தொழிலில் ஈடுபட்டிருந்தனர். அதனால், எமக்கு அந்தளவு கஷ்டம் இருக்கவில்லை. எனது பாடசாலைக்காலம் நிறைவுபெற்றவுடன் முதலாவது தொழிலில் இணைந்து கொண்டேன். பாடசாலையில் உள்ளவர்களே எனக்கு தொழில் ஒன்றை பெற்றுக் கொடுத்தார்கள். சி.ரி.சி.ஈகல் காப்புறுதி நிறுவனத்தில் காப்புறுதி பிரதிநிதியாக நான் முதன் முதலாக தொழில் புரிந்தேன். அந்தத் தொழிலை செய்து கொண்டிருந்த போது அம்பாறையில் கிராமின் கிளை ஆரம்பிக்கப்பட உள்ளதாக அறியக்கிடைத்தது. நான் நேர்முகப் பரீட்சையில் தோற்றி தெரிவு செய்யப்பட்டேன். கிளை முகாமையாளர் என்ற வகையில் நான் பதவியை ஏற்றுக் கொண்டேன். என்னுடன் ஐந்து பேர் அம்பாறை கிளைக்கு இணைத்துக் கொள்ளப்பட்டனர். பிரதான கிளையின் வஜிரவும் ஒருவர்.

**கிராமின் வாழ்க்கையில் மறக்க முடியாத சம்பவம்:** செலின்கோ நிறுவனம் நெருக்கடிக்கு உள்ளான போது எமது ஊழியர்கள் தொழில் உத்தரவாதம் இன்றி காணப்பட்டனர். இந்த சந்தர்ப்பத்தை நான் என்றும் மறக்க முடியாத காலமாகும். எம்முடன் இருந்த பலர் தொழிலில் இருந்து விலகி வேறு தொழில்களை நோக்கிச் சென்றனர். எமது சம்பளமும் குறைவாகவே கிடைத்தது. அவ்வாறான சகல பிரச்சினைகளுக்கும் மத்தியில் நாளைய தினம் தொடர்பில் எவ்வித நம்பிக்கையும் இன்றி காலம் கடந்து கொண்டிருந்த போது பிரைம் லேண்ட்ஸ் நிறுவன கிராமின் நிறுவனத்தை பொறுப்பேற்குமாறு கூறுவதற்காக எம்மை மொரட்டுவைக்கு அழைத்த தினம் . . . அந்த மகிழ்ச்சியான செய்தி எமது காதுகளுக்கு எட்டிய சந்தர்ப்பம் . . . அந்த அனைத்து சம்பவங்களும் என்னால் மறக்க முடியாது.

**வாழ்க்கையில் மிகவும் சந்தோஷமான மற்றும் துக்கமான தினமாக கருதுவது. . .** எனது மகள் நிஷாதி அமந்தியா பிறந்த தினம் . . . 2007 ஆகஸ்ட 21. அன்றுதான் எனக்கு மிகவும் மகிழ்ச்சிக்குரிய தினமாகும். நான் திருமணம் முடித்து இரண்டு வருடங்களின் பின்னரே எமக்கு குழந்தை பிறக்க இருந்தது. எனினும் 8 ஆவது மாதத்தில் பிள்ளை வயிற்றில் இருக்கும் போதே இறந்து விட்டது. இது வேதனைக்குரிய சம்பவமாகும்.

**சரி செய்ய வேண்டுமென நினைக்கும் ஏதேனும் விடயங்கள் இருப்பின்:**

நான் எந்தவொரு நபரின் கருத்துக்களையும் ஏற்றுக் கொண்டு ஏமாற்றமடைந்த பல சம்பவங்கள் எனது வாழ்வில் நிகழ்ந்துள்ளது. இதனை மாற்றிக் கொள்ள வேண்டுமென நான் நினைக்கிறேன்.

**முதல்காதல் வாழ்க்கையில் ஏற்படுத்திய மாற்றம்:** காதல் என்ற உணர்வு முதன் முதலில் மனதில் பதியப்படும் போது சரியாக மின்சாரம் தாக்கியதைப் போன்ற உணர்வு ஏற்படும். அவ்வாறான உணர்வு நான் உயர்தரம் கற்றுக் கொண்டிருந்த போது எனக்கு ஏற்பட்டது. அந்த உணர்வை அவளுக்கு தெரிவிக்காமல் சுமார் 6 மாதம் வரை காத்திருந்தேன். இறுதியாக நான் எனது காதலை அவளிடம் தெரிவித்த போது உடனடியாக சரியென்று கூறவில்லை. சில காலம் நண்பர்களைப் போன்று பழகினோம். எனினும் பாடசாலையை விட்டு விலகிய பின்னர் அவளின் குடும்பத்தாரின் வார்த்தைக்கு மறுப்பு தெரிவிக்க முடியாமல் போனது. நாம் இருவரும் ஒன்றாக கலந்துரையாடி பிரிந்தோம்.

அந்த பெண்ணிடம் காணப்பட்ட நற்பண்புகள்: நான் திருமணம் முடிக்க உள்ள பெண் தொடர்பில் என் மனதில் இருந்த படம் நனவான போது நான் முதன் முதலாக அந்தப் பெண்ணைப் பார்த்த நிகழ்வு ஞாபகத்துக்கு வந்தது. நான் காதலித்தே திருமணம் செய்தேன். அவள் என்மீது அதிக அன்பு வைத்துள்ளார்.

**நாட்டின் நீதித்துறை கட்டமைப்பில் மாற்றமொன்றை ஏற்படுத்துமாறு உங்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டால். . .**

நீதிமன்ற சுயாதிபத்தியம் மீறப்படும் போது நாட்டில் அதிகளவு குற்றச் செயல்கள் இடம்பெறுகிறது என நான் நினைக்கிறேன். நீதிமன்றத்தின் மூலம் சகலருக்கும் நீதி கிடைக்க தேவையான சட்டங்களை உருவாக்க நான் முன் நிற்பேன்.

**பிடித்த பாடகர்:** பிரியா சூரியசேன

**பாடல்:** சுது பரவி ரோன சே . . . பாடசாலைக் காலத்தில் இந்தப் பாடல் எனக்கு மிகவும் விருப்பமாகும்

**திரைப்படம்:** திரைப்படம் பற்றி நான் விசேடமாக கூறுவதற்கு ஒன்றும் இல்லை.

**நாவல்:** மீனா புதிய நாவல்களை விரும்பி படிப்பேன்

**எதிர்கால இலக்கு:** தொழில் என்ற வகையில் நான் நிறுவன வளர்ச்சிக்கு தேவையான சகல விடயங்களையும் செய்ய உள்ளேன். தனிப்பட்ட வாழ்க்கையில் பிள்ளைகளை நன்றாக படிக்க வைத்து அவர்களுக்கு சிறந்த எதிர்காலமொன்றையும் பெற்றுக் கொடுப்பதுடன் குடும்ப வாழ்க்கையில் நிறைவாக வாழ விரும்புகிறேன்.

ஆக்கம்
மஞ்சுள பிரபாத் ஹெட்டியாராச்சி

Micro Finance எண்ணக்கரு சிறப்பு பார்வை

# மைக்ரோ பினான்ஸ் நிறுவனத்தின் ஆரம்பமும் நடைமுறையும் பகுதி 5



பிரைம் கிராமின் மைக்ரோ பினான்ஸ் கம்பனியின் முகாமைத்துவ பணிப்பாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி சமிந்த பிரபாத் அவர்களுடனான நேர்காணலை கீழே தருகின்றோம்

## தனிநபர் கடன் திட்டத்தில் காணப்படும் சவால்கள்




மைக்ரோ பினான்ஸ் திட்டத்தில் காணப்படும் எளிமையான தன்மையினால் தனிநபர் கடன் திட்டத்தில் பல்வேறு பிரச்சினைகள் தோன்றுகின்றன. இதில் கடன் வழங்கும் போது ஏற்படக்கூடிய செலவு மற்றும் கடனை மீள அறவிடும் போது ஏற்படக்கூடிய இயற்கையான இடர்பாடுகள் பிரதான சவாலாக காணப்படுகின்றன. அவ்வாறெனில் கடன் வழங்கப்படும் போது நிறுவனத்தினால் வழங்கப்படும் கடன் தொகைக்கு அப்பால் செயற்பணிகளுக்காக இன்னும் பாரிய செலவுகள் ஏற்படுகின்றன. கடனைப் பெற்றுக் கொள்ளும் நபர் சில சந்தர்ப்பத்தில் அல்லது தனது கடன் தொகையை மீண்டும் செலுத்த முடியாது போனால் அதனால் நிறுவனத்துக்கு எவ்விதம் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை மதிப்பீடு செய்வது இலவான விடயமாகும்.

உலகளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தும் எந்தவொரு நிதி நிறுவனமும் கடன் வழங்கும் போது இந்தப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுப்பது சாதாரண விடயமாகும். எனினும் நிதி நிறுவனம் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இந்த விடயத்தின் பாதகத்தை குறைத்துக் கொள்வதற்கு முயற்சி செய்யும். அவ்வாறு செயற்படவில்லையாயின் அந்த நிதி நிறுவனம் நட்டமடையக்கூடிய சந்தர்ப்பங்களும் ஏற்படலாம். உலகத்தில் இவ்வாறான பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து நட்டமடைந்த நிதி நிறுவனங்கள் தொடர்பில் எடுத்துக்காட்டுவதற்கு பல உள்ளன.

நிதி நிறுவனம் ஒன்று கடன் வழங்கும் போது கடன் பெறுபவரிடம் ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட வேண்டும். இவ்விதம் ஒப்பந்தம் கைச்சாத்திடும் போதும் அதன் மூலம் நூற்றுக்கு நூறு பாதுகாப்பு கிடைத்துவிட்டதென்று கருத முடியாது. அவ்வாறெனில் நிதி நிறுவனம் இன்று வழங்கும் கடன் தொகையானது நிச்சயிக்கப்படாத எதிர்காலம் ஒன்றுக்காகவேயாகும். இதனை வேறு விதமாக குறிப்பிடுவதாயின், கடன்பட்டவர் பெற்றுக் கொண்ட கடன் தொகையை எந்தத் துறையில் முதலீடு செய்கிறார் என்பதை வைத்து கடனை மீள அறவிட்டுக் கொள்வது தீர்மானிக்கப்படுகிறது.

கைத்தொழில் ஒன்றுக்காக கடன் பெற்றுக் கொண்ட நபர் ஒருவர் அந்த கடன் தொகையை சரியாக முதலீடு செய்யத் தவறினால் இறுதி பெறுபேறு கடன் வழங்கிய நிறுவனத்துக்கே பாரிய பிரச்சினையை ஏற்படுத்தும். இதனால், கடன் பெற்றவர் கடனை திருப்பிச் செலுத்தாமல் காலதாமதப்படுத்தும் நிலையே ஏற்படும். மறுபக்கத்தில் இயற்கை ஆபத்துக்களை தடுக்க முடியாமல் நிறுவனத்தை விட்டு செல்ல வேண்டிய நிலையும் ஏற்படும். இவ்வாறான காரணங்களுக்கு மேலதிகமாக வேண்டுமென்றே சிலர் கடனை திருப்பிச் செலுத்தாத சந்தர்ப்பங்களும் உண்டு. இவ்வகையான எந்த நிலைமையிலும் கடனைச் திருப்பிச் செலுத்தாமல் விடுவதற்கு கடன்பெற்றவர் செயற்பட்டால் அது நிதி நிறுவனத்துக்கு கடன் அபாயத்துக்கே (ஊசநனவை சுளைம) இட்டுச் செல்லும்.

கடன் வழங்கும் போது கடன் கொடுப்பவரும் கடனை எடுப்பவரும் நம்பிக்கையை கட்டியெழுப்ப வேண்டும். சில சந்தர்ப்பங்களில் கடன் கொடுப்பவரினால் கடன் எடுப்பர் தொடர்பில் ஏற்படக்கூடிய அந்நியொன்ய நெருக்கம் போலியாக இருந்தால் . . . இதனால், சகல சந்தர்ப்பங்களிலும் கடன் கொடுக்கும் நிறுவனம் கடன் பெறுபவருடன் உண்மையாகவே நெருக்கமான தொடர்பு காணப்படுகின்றது என்ற தகவலின் நம்பிக்கையிலாகும். சாதாரணமாக மைக்ரோ பினான்ஸ் நிறுவனத்துக்கு காணப்படும் சொத்துக்களில் 80 வீதமானவை சேவையை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்பட்ட கடன்களாகும். ஆகவே, மைக்ரோ பினான்ஸ் நிறுவனத்தின் கடன் மீள அறவிடுவதில் குறைபாடு காணப்படுமாயின் அது நிறுவனத்துக்கு நேரடியான தாக்கத்தை ஏற்படுத்தும்.

கடன் அபயாத்தை ஏற்படுத்தும் காரணங்கள்

1. தகவல்

நாம் வெளிப்படையான உலகத்தில் வாழ்க்கை நடத்தவில்லை. எம்முடன் வாழும் மற்றவர்களின் தகவல்கள் எமக்கு கிடைப்பதில்லை. தெரிந்த விடயங்களைத் தவிர நூற்றுக்கு நூறு உண்மையாக இருக்க முடியாது. கடன் கொடுப்பவர் மற்றும் கடன் பெறுபவரிடையே எவ்வித தொடர்பும் அற்ற நிலையே இருக்கும். இதன் மூலம் கடன்பட்டவர் தொடர்பில் நிதி நிறுவனம் பெற்றுக் கொள்ளும் தகவல் நூற்றுக்கு நூறு வீதம் உண்மையாக இருக்காது. தகவலைப் பெற்றுக் கொள்வதில் உள்ள குறைபாடே இதற்கான பிரதான காரணமாகும். கடன்பட்டவரினால் தனது கொடுக்கல் வாங்களின் தற்போதைய மற்றும் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய ஆபத்துகள் தொடர்பில் சரியான விளக்கங்களை ஒருபோதும் தெரிவிப்பதில்லை. கடன் வழங்கும் நிறுவனம் இந்த விடயம் தொடர்பில் ஆராய்ந்து பார்த்தாலும் அதிலும் நூற்றுக்கு நூறு சரியான தகவல் வெளிவரும் என்று எதிர்பார்க்க முடியாது. இதனால், கடன் எடுப்பவர் தொடர்பில் சகல உண்மையான தகவல்களும் வெளிப்படுத்தப்பட வேண்டுமென்ற சவாலை மைக்ரோ பினான்ஸ் நிறுவனம் உட்பட கடன் வழங்கும் சகல நிறுவனங்களும் மற்றும் நபர்களும் எதிர்நோக்குகின்றனர்.

## பிரைம் கிராமின் நிறுவனத்துக்கு இலங்கை கொடுகடன் தகவல் பணியகத்தின் விருது



இலங்கையில் நடைமுறையில் உள்ள சகல வங்கி மற்றும் நிதி நிறுவனங்களினால் முன்னெடுக்கப்படும் கொடுக்கல் வாங்கல் தொடர்பில் மேற்பார்வை செய்யும் இலங்கை கொடுகடன் தகவல் பணியகத்தினால் தமது 25 வருட நிறைவை முன்னிட்டு வரலாற்றில் முதல் தடவையாக தமது பணியகத்தினால் பதிவு செய்யப்பட்ட வங்கி மற்று நிதி நிறுவனங்கள் 91 நிறுவனங்களில் பிரதான 6 நிறுவனங்கள் மதிப்பீடுக்கு உட்படுத்தப்பட்டன.

இவ்வாறு மதிப்பீடு செய்யப்பட்டவைகளில் வங்கி மற்றும் நிதி நிறுவனங்கள் 91 இல் இலங்கை கொடுகடன் தகவல் பணியகத்தினால் தமது நிறுவனத்தின் வாடிக்கையாளர்களுக்கு கடன் தகவல்கள் சரியாக வழங்கப்படல் மற்றும் தகவல்கள் முறையாக பேணப்பட்டு வந்தமை 6 நிறுவனங்களினால் மாத்திரமே இடம்பெற்றுள்ளன. வாடிக்கையாளரின் எண்ணிக்கைக்கு ஏற்ப தரப்படுத்தலில் வாடிக்கையாளர் எண்ணிக்கை ஒரு இலட்சத்துக்கும் மூன்று இலட்சத்துக்கும் இடைப்பட்ட தரப்படுத்தலின் கீழ் சகல வங்கி மற்றும் நிதி நிறுவனங்களை மீறி முதலாவது இடத்தை பிரைம் கிராமின் மைக்ரோ பினான்ஸ் நிறுவனம் பெற்றுக் கொண்டது.

இந்நிகழ்வில் மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். அவர்களினால் பிரைம் கிராமின் மைக்ரோ பினான்ஸ் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் சமிந்த பிரபாத் அவர்கள் மற்றும் முகாமையாளர்களான அனுகூலதா, உசான் ஹப்புஆராய்ச்சி அவர்கள் விருதினைப் பெற்றுக் கொள்வதைப் படத்தில் காணலாம்.

# சம்புது வெசாக் தினத்தை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் தன்சல்

ஸ்ரீ சம்புத்த வெசாக் தினத்தை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் நடைபெற்ற பல்வேறு சமய மற்றும் சம்பிரதாய நிகழ்வுகளுக்கு சமாந்தரமாக பிரைம் கிராமின் மைக்ரோ பினான்ஸ் நிறுவனத்தின் தலைமைக் காரியாலயம் மற்றும் நாடளாவிய ரீதியில் பரந்து காணப்படும் கிளைகளின் ஊடாக தன்சல வழங்கப்பட்டன. அவ்வாறு தன்சல வழங்கப்பட்ட கிளைகளில் ஒன்றான கடுவளை, மத்துகம, வெலிமடை மற்றும் வத்தளை கிளைகளினால் வழங்கப்பட்ட தன்சல நிகழ்வுகளை படத்தில் காணலாம்.


வெலிமடை


வத்தளை


கடுவளை


மத்துகம

## பிரைம் கிராமின் ஊழியர் சங்கத்தின் அனுசரணையின் மரவள்ளி தன்சல

பிரைம் கிராமின் மைக்ரோ பினான்ஸ் லிமிட்டெட் ஊழியர் பொறுப்பு நிதிய சங்கத்தினால் இரண்டாவது தடவையாகவும் ஏற்பாடு செய்யப்பட்ட மரவள்ளி தன்சல மே மாதம் 05ஆம் திகதி மாலை 4.30 மணியில் இருந்து நள்ளிரவு வரை நுகேகொடை நாவல வீதியில் அமைந்துள்ள பிரைம் கிராமின் மைக்ரோ பினான்ஸ் நிறுவன தலைமையகத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் பங்களிப்புடன் நடைபெற்றது.







உபசரிப்பு பணி

## பிரைம் கிராமின் அனுசரணையில் உடுஹாவர மகா வித்தியாலத்திற்கு பெயர்ப்பலகை. . .





உடுஹாவர ஸ்ரீ மேதானந்த மகா வித்தியாலயம் வெலிமடையில் இருந்து 15 கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ள மிகவும் கஷ்ட பிரதேச சிறிய பாடசாலையாகும். 800 மாணவர்கள் கல்வி கற்கும் இந்த சிறிய பாடசாலையில் பல காலமாக பெயர்பலகை இன்றி செயற்பட்டு வந்தது. இப்பாடசாலையின் குறைபாடாக இருந்த இப்பிரச்சினைக்கு அண்மையில் தீர்வு காணப்பட்ட “உடுஹாவர மகா வித்தியாலயம்” என்ற பெயர் பலகை பொருத்தப்பட்டது.

உடுஹாவர மகா வித்தியால அதிபரின் வேண்டுகோளுக்கு அமைய பிரைம் கிராமின் மைக்ரோ பினான்ஸ் நிறுவனத்தினால் அண்மையில் இந்த அன்பளிப்பு செய்யப்பட்டது. பிரைம் கிராமின் வெலிமடை கிளையின் ஊடாக தலைமைக் காரியாலயத்துக்கு கிடைக்கப் பெற்ற வேண்டுகோளுக்கு பிரைம் கிராமின் மைக்ரோ பினான்ஸ் நிறைவேற்றுப் பணிப்பாளர் சமிந்த பிரபாத் அவர்கள் உட்பட பணிப்பாளர் சபையின் அனுமதிக்கு அமையவே இந்த பெயர்பலகை கிடைக்கப் பெற்றது.

இதற்கான செலவுகள் மதிப்பீடு செய்யப்பட்டு பெயர்ப்பலகை 2015 மார்ச் மாத நடுப்பகுதியில் தயாரிக்கப்பட்டது. அதன் பின்னர் மார்ச் 25ஆம் திகதி பெயர்ப்பலகை திறந்து வைக்கும் வைபவம் பிரைம் கிராமின் பிரதேச முகாமையாளர் காமினி ஆரியசிங்க, கிளை முகாமையாளர் ருவன் அபேசேகர உட்பட காரிய உத்தியோகத்தர்கள் உடுஹாவர மகா வித்தியால அதிபர், ஊவா பரணகம கல்வி வலய காரியாலய வலயப் பணிப்பாளர், முன்னாள் அதிபர், ஆசிரிய, ஆசிரியர்கள், மாணவ, மாணவிகளின் பங்களிப்புடன் பாடசாலை பிரதான மண்டபத்தில் மிகவும் எளிமையாக நடைபெற்றது.

பாடசாலையின் பாரிய குறைபாடாக காணப்பட்ட இந்த பெயர்ப்பலகையை பெற்றுக் கொடுத்தமைக்காக பிரைம் கிராமின் மைக்ரோ பினான்ஸ் நிறுவனத்துக்கு மனப்பூர்வமான நன்றிகளை தெரிவித்துக் கொள்வதற்காக பாடசாலை அதிபர் அங்கு உரையாற்றும் போது தெரிவித்தார்.




### முகாமைத்துவம் செய்வதில் பிரச்சினைகளாக...

எதிர்பார்த்ததை விட மாற்றமாக செயற்படும் போது பிரச்சினைகள் ஏற்படும். அதனால், எதிர்பார்த்த இலக்கும், தற்போதைய நிலையும் மாற்றம் ஏற்பட்டால் அது பிரச்சினையாக அடையாளப்படுத்தப்படும். பிரச்சினைகள் பெரிதானாலும் சிக்கல்கள் ஏற்பட்டாலும் முகாமையாளர்கள் அதற்கு தீர்வு பெற்றுக் கொடுக்க வேண்டும். பிரச்சினைகளை தீர்ப்பதற்கான முடிவை எடுக்க வேண்டும்.

### முகாமையாளர்கள் தீர்மானம் எடுக்கும் போது

தீர்மானம் எடுப்பது மாற்று வழியாகும். தீர்மானம் எடுப்பது முகாமையாளரின் பிரதான விடயமாகும். அது முகாமைத்துவத்தின் முடிவாக அடையாளப்படுத்தப்படும். நிறுவனத்தின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் விடயமாக இருக்கும். தீர்மானம் எடுக்கும் வழிமுறையாக குறிப்பிட முடியும்.

### தீர்மானம் எடுக்கும் வழிமுறைகள்


(Decision making process)

பிரச்சினைகளை சரியாக அடையாளம் கண்டு அதற்கான மாற்று வழியில் தீர்ப்பது தொடர்பிலும் அந்த மாற்று வழியில் மிகவும் சிறந்த ஒன்றை தெரிவு செய்து நடைமுறைப்படுத்துவது தீர்மானம் எடுக்கும் வழிமுறையாகும். அதனை கீழே இல.01 என்று அடையாளப்படுத்த முடியும்.

#### 1. பிரச்சினைகளை அடையாளம் காணல்

(Identification of the problem)

எதிர்பார்த்ததை விட மாற்றமாக செயற்படும் போது பிரச்சினைகள் ஏற்படலாம். பிரச்சினைகள் தோன்றுகிறது என்று தெரிந்து கொண்டால் முகாமையாளர்கள் நடந்து கொள்ள வேண்டிய முறைகள் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். பிரச்சினைகள் இருப்பதாக அறிந்து கொண்டால் முகாமையாளர்கள் அதனை சரியாக கணிப்பிட்டுக் கொள்ள வேண்டும்.




பிரச்சினைகளுக்கான பிரதான காரணம் என்ன என்பதை சரியாக அடையாளப்படுத்திக் கொள்ள வேண்டும். சில பிரச்சினைகளை தவறான முறையில் புரிந்து கொண்டால் அதனைத் தீர்ப்பதில் வெற்றிகாண முடியாது. பிரச்சினைகள் பல வடிவில் தோற்றம் பெற முடியும்.




உதாரணமாக :-

- ❖ திட்டமிட்ட அடிப்படையில் அல்லாது பெறுபேறு மாற்றமாக இருத்தல்.
- ❖ ஆரம்பத்தை விட சமகாலத்தில் மாற்றமாக இருத்தல்
- ❖ போட்டியாளர்களின் செயற்பாடு
- ❖ வாடிக்கையாளர்கள் முகாமைத்துவத்துக்கு எதிராக முறைப்பாடு செய்தல்.

#### 2. மாற்று வழிகளை அடையாளப்படுத்தல்

(Developing Alternatives)

முகாமையாளர் தமது பிரச்சினையை தீர்த்துக் கொள்வதற்கு வேறு உபாயங்களை தெரிவு செய்து கொள்ள வேண்டும். முகாமையாளரின் செயற்பாடு, ஏனைய முகாமையாளரின் செயற்பாடு என்பவற்றை அறிந்து கொள்ள வேண்டும். முகாமையாளரிடம் படைப்பாற்றல் திறன் மிகவும் அவசியமாகும்.

#### 3. மாற்று வழிகளை மதிப்பீடு செய்தல்

(Evaluation of Alternatives)

முன்வைக்கப்பட்டுள்ள மாற்று வழிகளை வெவ்வேறாக மதிப்பீடு செய்து பயன்படுத்த வேண்டும். அந்தந்த மாற்று வழிமுறை மற்றும் குறைபாடுகளை மதிப்பீடு செய்து அவற்றில் சிறந்த ஒன்றை தெரிவு செய்ய வேண்டும்.

#### 4. சிறந்த மாற்றுவழியை தெரிவு செய்தல் / சரியான தீர்மானம் எடுத்தல்

(Selecting Best Alternative)

மாற்று வழிகளை மதிப்பீடுவதுடன் பெற்றுக் கொண்ட தீர்மானத்தின் அடிப்படையில் மாற்று வழிகளை தெரிவு செய்ய வேண்டும். இங்கு பிரச்சினைக்கு தீர்வு வழங்கும் நிறுவனத்தின் இலக்கு மற்றும் வளம் என்பவற்றுக்கு ஏற்ப நடைமுறைப்படுத்தும் சிறந்த மாற்றுவழியை தெரிவு செய்ய வேண்டும். சரியான மாற்றுவழியை தெரிவு செய்வது இலகுவான விடயமல்ல. ஏனெனில் சரியான தீர்வினைப் பெறும் மாற்றுவழி இலகுவில் கிடைப்பதில்லை. இதனால் தான், மாற்றுவழியே இதன் பிரதான குறைபாடாக குறிப்பிட முடியும்.

#### 5. முடிவுகளை நடைமுறைப்படுத்தல்

(Implementing)

சரியான மாற்று வழியை நடைமுறைப்படுத்தல். இதன் போது தெரிவு செய்த வேலைத்திட்டத்தை தயார்படுத்தல், தேவையான வளங்களை ஒதுக்கீடு செய்தல். நிர்வாக சக்தி மற்றும் பொறுப்பை பகிர்ந்தளித்தல், அறிவுரை வழங்கப்படுதல் என்பன முக்கியமாகும். அவ்வாறே முடிவுகளை நடைமுறைப்படுத்தும் போது அதன் முன்னேற்ற அறிக்கையை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.


#### 6. முடிவுகளை மதிப்பீடுதல்

(Evaluation Of Decision)

முடிவுகளை நடைமுறைப்படுத்திய பின்னர் அவற்றை எவ்விதம் செய்ய வேண்டுமென அறிவுறுத்த வேண்டும். தீர்மானம் சரியாக எடுத்தாலும் அதனை முறையாக நடைமுறைப்படுத்தப்படுகிறதா என்பதை ஆராய வேண்டும். நடைமுறைப் படுத்தப்பட்ட விடயம் தொடர்பில் பலரின் ஆலோசனை மற்றும் பெறுபேறுகளை மதிப்பீடு செய்ய வேண்டும்.



சந்தகெலும் ஜயதுங்க,
கணக்காளர்,
பிரைம் கிராமின்
மைக்ரோ பினான்ஸ் லிமிட்டெட்.




எந்த விடயத்திலும் தர்க்கம் புரிபவர்கள் எதனையும் சரியாக செய்ய மாட்டார்கள்

# பிரைம் கிராமின் மட்டக்களப்பு கிளை புதிய முகவரியில் . . .

பிரைம் கிராமின் மைக்ரோ பினான்ஸ் லிமிட்டெட் கிகைளில் 19ஆவது கிளையான பிரைம் கிராமின் மட்டக்களப்பு கிளை கடந்த மே 15ஆம் திகதி காலை. 9.30 மணி சுபநேரத்தில் புதிய கட்டிடத்தில் செயற்பட ஆரம்பித்தது.

பலகாலமாக இல. 33, வைத்தியாசலை வீதி, மட்டக்களப்பு என்ற முகவரியில் தமது வர்த்தக செயற்படுகளை முன்னெடுத்து வந்த மட்டக்களப்பு கிளை இன்றிலிருந்து இல. 39/2, சென்றல் வீதி, மட்டக்களப்பு என்ற முகவரியில் வர்த்தக செயற்பாடுகளை முன்னெடுக்கும்.

புதிய கட்டிடத் திறப்பு விழாவில் மைக்ரோ பினான்ஸ் லிமிட்டெ் முகாமைத்துவப் பணிப்பாளர் / பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் சமிந்த பிரபாத் பணிப்பாளர் திருமதி கிறிசாந்தி தம்பையா, பிரதி பொதுமுகாமையாளர் விமல் செனவிரத்ன, உதவி பொதுமுகாமையாளர் கமல் பிரியங்க ஆகியோருடன் பிரைம் கிராமின் மைக்ரோ பினான்ஸ் லிமிட்டெட் உத்தியோகத்தர்கள், ஹட்டன் நஷனல் வங்கி மட்டக்களப்பு கிளை சிரேஷ்ட முகாமையாளர் மற்றும் வாடிக்கையாளர்கள் உட்பட பெருமளவானோர் கலந்து கொண்டனர்.

அன்றைய திறப்பு விழாவுக்கு சமாந்தரமாக வாடிக்கையாளர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட யாலு கணக்கு, பிரைம் கணக்கு மற்றும் நிலையான வைப்பு ஆகியன அதிகளவான வாடிக்கையாளர்களினால் ஆரம்பிக்கப்பட்டது. பிரைம் கிராமின் மட்டக்களப்பு கிளையின் நம்பிக்கையான சேவைக்கு அவர்களினால் வாழ்த்துக்களும் தெரிவிக்கப்பட்டன.



# Happy Birthday

மே மற்றும் ஜுன் மாத பிறந்த நாளைக் கொண்டாடும் பிரைம் கிராமின் நிறுவன ஊழியர்க ளுக்கு எமது இதயம் கனிந்த நல்வாழ்த்துக்கள்...!

| பெயர் | மாதம் | கிளை |
|---|---|---|
| திரு. நளின் த சில்வா | மே 16 | மாத்தறை |
| திரு. அமல் பிரகீத | மே 16 | ஹம்பாந்தோட்டை |
| திரு. ஜானக செனவிரத்ன | மே 16 | வெலிமடை |
| திரு. யு.எம். சமிந்த | மே 16 | வெலிமடை |
| திரு. ரூமேஷ் பண்டார | மே 16 | நாவலப்பிட்டி |
| திரு. நுவன் தர்ஷன | மே 16 | அம்பலாங்கொடை |
| திரு. சிந்தக ராஜபக்ஷ | மே 17 | வெலிமடை |
| திரு. யொஹான் தனஞ்சய | மே 17 | தலைமையகம் |
| திருமதி கேஷானி குருப்பு | மே 17 | தலைமையகம் |
| திரு. அமில பிரியந்த | மே 17 | வெலிமடை |
| திரு. சந்தன பிரசன்ன | மே 17 | கடுவளை |
| திரு. என். சிவரூபன் | மே 17 | முல்லைத்தீவு |
| திரு. மிதில சங்தீப | மே 17 | மத்துகம |
| திரு. டிஷான் அன்ரூ | மே 18 | தலைமையகம் |
| திரு. இந்திக விக்ரமசிங்க | மே 18 | பதுளை |
| திரு. பிரசாத் நிர்மால் | மே 18 | நீர்கொழும்பு |
| திரு. திலின லக்மால் | மே 19 | வென்னப்புவ |
| திரு. சத்துர பிரியங்க | மே 19 | பெலியத்தை |
| திரு. இந்திக நுவன்குமார | மே 21 | கல்கமுவ |
| திரு. திலான் காஷ்மீர் | மே 21 | நிட்டம்புவ |
| திரு. சத்துரங்க ஆரியதாஸ | மே 21 | இரத்தினபுரி |
| திரு. தினேஷ் தரங்க | மே 22 | தலைமையகம் |
| திரு. இந்திக சந்தருவன் | மே 22 | பொலன்னறுவை |
| திரு. பீ. கிஸாந்த் | மே 23 | மட்டக்களப்பு |
| திரு. சுமுது சுதர்ஷன | மே 23 | தலைமையகம் |
| திரு. நிசாந்த பிரதீப் | மே 23 | மதவாச்சி |
| திரு. இரும் ரந்தெனிய | மே 23 | தலைமையகம் |
| திரு. குமாரசாமி பவிராஜ் | மே 23 | யாழ்ப்பாணம் |
| திரு. சரிந்த விஜேசிங்க | மே 23 | ஹோமாகம |
| திரு. ஹசான் அனுரங்க | மே 23 | பொலன்னறுவை |
| திரு. துசார | மே 24 | மாத்தறை |
| திரு. தினேஷ் ரஞ்சன் | மே 24 | ஜாஎல |
| திரு. அசங்க திஸாநாயக்க | மே 24 | நுவரெலிய |
| திரு. வசந்த புத்திக | மே 24 | கடுவளை |
| திரு. நுவன் சமீர | மே 24 | களுத்துறை |
| திருமதி. அனோமா மல்காந்தி | மே 24 | தலைமையகம் |
| திருமதி. கமகே இசானி | மே 25 | மாத்தறை |
| திரு. உதய பிரியந்த குமார | மே 25 | பொத்துவில் |
| திரு. தனஞ்சய சொய்ஸா | மே 25 | ஹொரன |
| திரு. கபில அபேவர்தன | மே 26 | கேகாலை |
| திரு. அஜித் பிரேமகீர்த்தி | மே 26 | பதுளை |
| திரு. ஸ்ரீ காந்தன் கீதசரன் | மே 26 | மல்லாவி |
| திரு. கே. பாலச்சந்திரன் | மே 26 | வவுனியா |
| திரு. ரொஹான் புத்திக | மே 26 | திருகோணமலை |
| திரு. அசங்க கம்லத் | மே 27 | குளியாபிட்டி |
| திரு. ஏ. ரெஜினோல் | மே 28 | மன்னார் |
| திரு. ஜனித் பிரசாந்த | மே 28 | கடுவளை |
| திரு. சாந்த குமார | மே 29 | அம்பாறை |
| திரு. நுவன் பிரியதர்ஷன | மே 29 | மாத்தறை |
| திரு. சுஜித் அனுர | மே 29 | தலைமையகம் |
| திரு. மஹலிங்கம் சுமன்ராஜ் | மே 29 | வவுனியா |
| திரு. அருன பிரியசாந்த | மே 30 | பதுளை |
| திரு. கபில தென்னக்கோன் | மே 30 | சிலாபம் |
| திரு. இசுரு மதுராவல | மே 30 | கடுவளை |
| திரு. அனில் சஞ்சீவ | மே 31 | மஹியங்கனை |
| திரு. கே. லோகநாதன் | மே 31 | முல்லைத்தீவு |
| திரு. கபில தர்மசேன | ஜுன் 01 | அவிஸ்ஸாவளை |
| திருமதி. ஸசனி தாரிகா | ஜுன் 01 | தலைமையகம் |
| திரு. சானக்க கயான் சில்வா | ஜுன் 01 | கம்பஹா |
| திரு. சமீத தர்ஷன | ஜுன் 01 | களுத்துறை |
| திரு. சமிந்த குமார | ஜுன் 02 | ஹோமாகம |
| திரு. குசாந்த சமிந்த | ஜுன் 02 | வெலிமடை |
| திரு. சனத் பிரியங்கர | ஜுன் 02 | அனுராதபுரம் |
| திரு. மதுசங்க வேகடபொல | ஜுன் 02 | கண்டி |
| திரு. டிலான் சம்பிக்க | ஜுன் 02 | ஹொரனை |
| திரு. திலின பிரியங்கர | ஜுன் 03 | எம்பிலிபிட்டி |
| திரு.அரவிந்த அகலங்க | ஜுன் 04 | அம்பாறை |
| திரு. ருவன் மஞ்சுல | ஜுன் 04 | நுரைச்சோலை |
| திரு. என். ஞானசுந்தரம் | ஜுன் 04 | மட்டக்களப்பு |
| திரு.நிரோட் அகலங்க | ஜுன் 05 | களுத்துறை |
| திரு. சஞ்சீவ பிரதீப் | ஜுன் 05 | பதவிய |
| திரு. நிரோஷன் ஹேரத் | ஜுன் 06 | நகரக்கிளை |
| திரு. நுவன் சஞ்சீவ | ஜுன் 07 | மதவாச்சி |
| திருமதி சத்துரிகா மதுசானி | ஜுன் 07 | தலைமையகம் |
| திரு. ஹர்ஷன மிலான் | ஜுன் 07 | குரநாகல் |
| திரு. லக்ஷ்மன் எராஜ் | ஜுன் 08 | தலைமையகம் |
| திரு. டபிள்யு.ஜீ. சுரங்க | ஜுன் 08 | நீர்கொழும்பு |
| திரு. நுவன் இந்திக | ஜுன் 08 | ஹொரன |
| திரு. நுவன் பிரதீப் | ஜுன் 08 | மொரவக்க |
| திரு. எம். ஜயதர்ஷன் | ஜுன் 09 | திருகோணமலை |
| திரு. கே. சன்முகராஜா | ஜுன் 09 | தலைமையகம் |
| திரு. கே. ஸ்ரீதரன் | ஜுன் 10 | வவுனியா |
| திரு. அன்டன் டொல்டா | ஜுன் 10 | நுரைச்சோலை |
| திரு. கே. ஸ்ரீதரன் | ஜுன் 10 | வவுனியா |
| திரு. என்டன் வொல்டா | ஜுன் 10 | நுரைச்சோலை |
| திரு. யோகநாதன் சுதெசன் | ஜுன் 10 | மட்டக்களப்பு |
| திரு. சமீர மதுசங்க | ஜுன் 10 | திருகோணமலை |
| திரு. சுனில் பெரேரா | ஜுன் 11 | ஹொரனை |
| திரு. மகேஷ் சஜீவன் | ஜுன் 11 | வத்தளை |
| திரு. மகேஷ் குமார | ஜுன் 11 | மாத்தறை |
| திரு. சமன்குமார | ஜுன் 11 | பதவிய |
| திரு. நளின் மதுஷான் | ஜுன் 11 | மொனராகலை |
| திரு. எரந்த ஸ்ரீ பிரியங்க | ஜுன் 12 | மாத்தளை |
| திரு. சஞ்சீவ பிரதீப் | ஜுன் 12 | பதுளை |
| திருமதி. சஷிகா லக்மினி | ஜுன் 12 | நிட்டம்புவ |
| திரு. நிரஞ்சன் செனரத் | ஜுன் 13 | கண்டி |
| திரு. சமிந்த பிரியங்கர | ஜுன் 14 | மொரட்டுவை |
| திரு. தினேஷ் ருவன்குமார | ஜுன் 14 | பெலியத்தை |
| திரு. சஞ்சய பண்டார | ஜுன் 14 | மாத்தளை |
| திரு. சிந்தன சுரெஷ் | ஜுன் 14 | குரநாகலை |
| திரு. அஜித் பிரசன்ன | ஜுன் 15 | மொனராகலை |
| திரு. ரி. தவனேஷ்வரன் | ஜுன் 15 | அம்பாறை |
| திரு. ஷாலிக ரஜித் | ஜுன் 15 | அவிஸ்ஸாவளை |
| திரு. திஷான் கல்ஹார | ஜுன் 15 | பண்டாரவளை |

# பிரைம் கிராமின் மியுலெசி உதவி ரண் வாசனா சீட்டிலுப்பு மட்டக்களப்பு

**மியுலெஸி உதவி ரண் வாசனா மட்டக்களப்பு கிளையின் சீட்டிலுப்பு கடந்த மே மாதம் 15ஆம் திகதி மட்டகளப்பு செல்வா மண்டபத்தில் மியுலெசி உதவி பெண்கள் சேமிப்பு கணக்குகளில் தெரிவு செய்யப்பட்ட முதலாவது வெற்றியாளருக்கு பெறுமதி மிக்க தங்க பெண்டன் வழங்கப்பட்டது. மேலும் ஆறுதல் பரிசில்களாக "மியுலெசி ரண் வாசனா" சீட்டிலுப்பின் மூலம் மட்டகளப்பு கிளையின் பின்வரும் அங்கத்தவர்கள் வெற்றிபெற்றனர்.**



**முதலாவது வெற்றியாளர் பெற்ற தங்கப் பெண்டன்**
அணைக்கட்டைவெலி மத்திய நிலைய திருமதி கே. தேவி

**ஆறுதல் பரிசு பெற்றவர்கள் – பிளென்டர் இரண்டு வெற்றி பெற்றோர்**
மஹிலத்தீவு மத்திய நிலையத்தின் திருமதி வீ. இதயரஞ்சனி
வந்தாறுமுல்லை 3 மத்திய நிலையத்தின் திருமதி. ஏ. பவித்ரா

**இரண்டு எரிவாயு அடுப்பை வெற்றி பெற்றோர்**
மஞ்சன்தொட்டுவாய் மத்திய நிலைய திருமதி கே. ஜனுவியா
ஊறுமுலைச்சோலை மத்திய நிலைய திருமதி எஸ்.ராஜேஸ்வரி

**பிரசர் குக்கர் இரண்டு வெற்றி பெற்றோர்**
தேத்தாதீவு மத்தியநிலையத்தின் திருமதி ரி. ஜயராணி
கரவெட்டி மத்திய நிலையத்தின் திருமதி. எம். பிரபா

**ரயிஸ் குக்கர் இரண்டு வெற்றி பெற்றோர்**
கல்முனை 4 மத்திய நிலைய திருமதி பீ. ராஜேஷ்வரி அம்மா
தாலன்குடா 3 மத்திய நிலையத்தின் திருமதி ஐ. ஜேகமாலா

**தனியடுப்பு கேஸ் குக்கர் இரண்டு வெற்றிபெற்றோர்**
குருமன்வெலி மத்திய நிலையத்தின் திருமதி என். அஜிதா
எருவில் மத்திய நிலையத்தின் திருமதி ரி. பாக்கியவதி

**மின்னழுத்தி நான்கு வெற்றி பெற்றோர்**
விநாயகபுரம் 3 மத்திய நிலையத்தின் திருமதி ஈ.டீ. நீட்டா
கல்லடி வேலூர் மத்திய நிலைய திருமதி ஜே. விமலாதேவி
தம்பிலுவில் 3 மத்திய நிலையத்தின் திருமதி எஸ். கவிதா
ஒன்னாச்சிமடம் மத்திய நிலையத்தின் திருமதி ஆர். ராஜகுமாரி



இந்த சீட்டிலுப்பு நிகழ்வில் பிரைம் கிராமின் மைக்ரோ பினான்ஸ் லிமிட்டெட் நிறுவன முகாமைத்துவப் பணிப்பாளர் / பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் சமிந்த பிரபாத் அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். பணிப்பாளர் திருமதி கிறிசாந்தி தம்பையா, பிரதி பொதுமுகாமையாளர் விமல் செனவிரத்ன, உதவி பொதுமுகாமையாளர் கமல் பிரியங் ஆகியோருடன் பிரைம் கிராமின் நிறுவன உத்தியோகத்தர்கள், அங்கத்தவர்கள் உட்பட பெருந்திரளானோர் கலந்து கொண்டனர்.

மெஹெவர
பிரைம் கிராமின் மைக்ரோ பினான்ஸ் லிமிட்டெட்
இல. : 168, நாவல வீதி, நுகெகொடை
தொலைபேசி: 0112176262 பெக்ஸ் : 0112825843
மின்னஞ்சல்: manjula.p@primegrameen.lk
இணையம்: www.primegrameen.com
பணிப்பாளர்: சமிந்த பிரபாத் (முகாமைத்துவ பணிப்பாளர் / பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர்)
பிரதம ஆசிரியர்: மஞ்சுள பிரபாத் ஹெட்டியாரச்சி
பக்க வடிவமைப்பு: கே.டி. ஷமில சிந்தக (அர்ஜுன கிராபிக்ஸ் (தனியார்) நிறுவனம்
கணனி தட்டெழுத்து உதவி: உதாரி தர்மவர்தன / உதார தனஞ்சய
படப்பிடிப்பு: லக்ஷ்மன் குமாரதுங்க